**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 10.08.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## Food Pro Expo 2026–ல் உணவுத் துறை புதுமைகளை வெளிப்படுத்திய COXBIT

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையமான COXBIT, சென்னை வர்த்தக மையத்தில் ஆகஸ்ட் 7 முதல் 9, 2026 வரை நடைபெற்ற Food Pro Expo 2026 கண்காட்சியில் பங்கேற்று, ஸ்டார்ட்அப் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட புதுமையான உணவுப் பொருட்களை காட்சிப்படுத்தியது.

கண்காட்சியின்போது, தமிழ்நாடு அரசின் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. பி. வெங்கடரமணன் அவர்கள் கண்காட்சித் தளங்களைப் பார்வையிட்டு, COXBIT குழுவினருடன் கலந்துரையாடினார். உணவுத் துறையில் புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் புதுமையான யோசனைகளை சந்தைக்குத் தயாரான பொருட்களாக மாற்றுவதில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல் தொடர்பான COXBIT–ன் முன்னெடுப்புகள் குறித்து குழுவினர் மாண்புமிகு அமைச்சரிடம் விளக்கினர். நிதியுதவி மற்றும் நிதி வாய்ப்புகளைப் பெறுவதற்கான வழிகாட்டுதல், பொருட்களின் மேம்பாடு மற்றும் தரச்சரிபார்ப்பிற்கான நவீன ஆய்வக வசதிகளுக்கான அணுகல், தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை, மேலும் பொருட்களின் மேம்பாட்டிற்கான பிரத்யேக பணியிடங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த ஸ்டார்ட்அப் ஆதரவு சூழலமைப்பை COXBIT எடுத்துரைத்தது.

COXBIT உணவுத் துறை சார்ந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்ட M/s. Aviva Organics, M/s. Themolife Pharmaceuticals, M/s. Ziwwits Sustainable Technologies Private Limited மற்றும் M/s. Arshitha Food Products ஆகிய நிறுவனங்களின் புதுமையான உணவுப் பொருட்கள், ஆராய்ச்சி சார்ந்த தொழில்முனைவின் மூலம் மதிப்புக்கூட்டப்பட்ட, புதுமையான மற்றும் சந்தை சார்ந்த உணவுத் தீர்வுகளை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளை எடுத்துக்காட்டின.

இத்தகைய முன்னெடுப்புகளின் மூலம், ஆராய்ச்சியிலிருந்து தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திலிருந்து ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்களிலிருந்து தொழில்துறை எனும் இணைப்பை COXBIT தொடர்ந்து வலுப்படுத்தி, தமிழ்நாட்டின் உணவுப் பதப்படுத்துதல் மற்றும் புதுமைச் சூழலமைப்பின் வளர்ச்சிக்கு பங்களித்து வருகிறது

**மக்கள் தொடர்பு அலுவலர்**